1990 ஏப்ரல் 9]

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி.

*2185. திரு. ராம. நாராயணன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காரைக்குடி தொகுதியில் மின் வசதி இல்லாத ஆதி திரா விடர் குடியிருப்புகளுக்கு எப்போது மின் வசதி அளிக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் உள்ள 180 ஆதிதிராவிடர் குடியிருப்புக்களில் 179 குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தட்டடி என்ற கிரா மத்திலுள்ள குடியிருப்புக்கு விரைவில் மின்வசதி அளிக்கப்பட்டு விடும்.

திரு. ராம. நாராயணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனுச் செய்தும் அவர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. மிக விரைவிலேயே கொடுத்தால் மிக நன்றாக இருக்கும் என் பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றி கூடிய விரைவில் நடவடிக்கை எடுத்து, ஆவன செய்யப்படும் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குதல்.

* 3431 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1977 ஆம் ஆண்டு முதல் நிலுவையிலுள்ள, நாகை வட்டம் தேமங்கலம் கிராமத்தில் சிராங்குடி புலியூர் கிராம ஆதி திரா விடர்களுக்கு வீட்டுமனை வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

9-50 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், தேமங்கலம் கிராமத்தில் வசிக்கும் உபரி ஆதிதிராவிடர்